**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.2**
**OS.NO.70/2022**

**Name** : Dayalan
**Father/Husband Name** : Ramadas
**Age** : 63

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 20.04.2026**

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

விசாரணை தொடங்கிய நேரம் : 11.55 A.M

குறுக்கு விசாரணை

சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் வரவில்லை. வழக்கறிஞர் போன் மூலம் அழைத்ததால் வந்தேன். இந்த வழக்கிற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சாட்சி மட்டும் தான். வாதி எனக்கு என்ன வேண்டும் என்றால் தங்கையின் மருமகன். என் தங்கையின் மகள் பெயர் சபீதா. அவர் எனக்கு சொந்தக்காரர் என்ற முறையிலும் அவர் கேட்டு கொண்டதன் பேரிலும் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான்.

இது என்ன வழக்கு என்ன விவரம் என்று எனக்கு நேரடியாக தெரியும். துரைராஜ் என்பவர் திருமணமாகாமல் தனியாக வசித்து வந்தார் என்றால் சரிதான். எனக்கும் துரைராஜ் என்பவருக்கும் தான் பழக்கம் என்றால் அவர் தம்பி தாமோதரன் என்பவருக்கும் நான் பழக்கம். வாதி ராகவன் நீதிமன்றத்தில் கூறியுள்ள விவரங்கள் உண்மையா என்றால் உண்மைதான்.

வாதி, நான், பலராமன் மற்றும் சுரேஷ் ஆகிய நாங்கள் துரைராஜ் என்பவரை கடந்த 16.08.2019 ஆம் தேதியில் சத்துவாச்சாரி ஓட்டலில் சந்தித்தோம் என்றால் சரிதான்.

நான் வாதிக்கு உறவினர் என்பதால் வாதிக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் அந்த தேதியில் தாவா கடனுறுதிசீட்டு அடிப்படையில் தாவா தொகை கை மாறவில்லை என்றால் சரியல்ல. எனவே தாவா செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

விசாரணை முடிந்த நேரம் : 12.00 P.M

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI Digitally signed by G SANTHI Date: 2026.04.20 18:20:54 +0530

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.